7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்திசையும் புகழ் மணக்க, நித்தமும் அற்புதங்கள் நிகழ்த்திவரும் எங்களின் முத்தமிழே! உங்கள் தலைமை உலகுக்குப் பெருமை; இப்படி ஒரு முதல்வரை இந்தியா கண்டதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி ஒரு வளர்ச்சியை தமிழ்நாடு கொண்டதில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என உலகமே பாராட்ட, பொற்காலம் படைத்துவரும் ஆற்றல் மிகுந்த எங்கள் படைத் தலைவியே! சிறு நரிக் கூட்டம் உங்கள் கர்ஜனை கேட்டாலே, கதிகலங்கி காணாமல் போய்விடும். இப்படைத் தோற்கின், எப்படை வெல்லும்? எவர் வந்தாலும், 'எங்கள் அம்மாவே வெல்வார்கள்' என வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

8. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 8–பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(இ) கோரிக்கை எண் 7–மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

– – –

(அ) கோரிக்கை எண் 8–பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014-2015 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 8-பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை). மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அம்மா, அம்மா, அம்மா', எங்கள் இதய தெய்வம் அம்மா; தமிழகத்தை வாழ்விக்க வந்த வரலாற்று இமயம் எங்கள் அம்மா; தமிழக மக்களை தம் கருணையால் வாழ்விக்க வந்த கருணை தெய்வம் எங்கள் அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) தன்னலம் பாராமல், கண் இமைகள் சோராமல் உழைக்கும் எங்கள் அம்மா; உங்கள் வீரச் சொல்லுக்கு, வீசும் காற்றுகூட கைகட்டி நிற்கும் அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் ஈரச் சொல்லால், இளம் நெல் நாற்றுகூட நெல்மணிகள் கொட்டும்*